# மாணவர்களது கல்வி மேம்பாட்டில் இடையூடாட்டமும் சமூகமயமாக்கலினது முக்கியத்துவமும் - மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு சமூகவியல் உசாவல்

ஞானமுத்து தில்லைநாதன்

ஒரு மனிதனை சமூகத்திற்கு ஏற்புடையவனாக மாற்றுகின்ற செயற்பாடே சமூகமயமாதல் எனப்படுகிறது. இச்செயற்பாட்டை கல்வியோடு தொடர்புபடுத்தி மேற்கொள்ளுமிடத்து நேர்நிலையான நடத்தைகள் கொண்ட மனித சமூகத்தை உருவாக்குவது இலகுவான தொன்றாகும். இச்செயற்பாட்டில் முக்கிய வகிபங்காளர்களான மாணவர்களினதும், ஆசிரியர் களினதும், பெற்றோர்களினதும் இடையூடாட்டம் (Interaction) அவசியமாகின்றது. இவர்களுக் கிடையிலான உறவுகள் நெருக்கமாகவும், நேர்நிலையாகவும் அமைகின்ற பட்சத்தில்தான் தனிமனித நடத்தையும், சமூக நடத்தையும் செம்மையாக அமையப்பெறும். கல்வியானது மூத்த தலைமுறையினரின் குறிக்கோளுடன் சேர்ந்த ஒரு செயல்தன்மையுடையதாகையால், மாணவர்கள் நேர்நிலையான (positive) இடைவினை கொள்வதற்கு மூத்த தலைமுறையினர் பொருத்தமான உளப்பாங்குடன் நேர்நிலையான சமூகமயமாதலை (Socalization) மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். சிறுவர்களை தாம் வாழப்போகும் சமூகத்திற்குத் தேவை யான பண்பாடுகள், விழுமியங்கள், சமூகக்கட்டுப்பாடுகள், உடலியல் திறன்கள், அறிவுசார் திறன்கள் என்பவற்றை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்றவிதமான சமூகமயமாதலை, கல்வியோடு தொடர்புடைய அத்தனை கூறுகளும் மேற்கொள்ள வேண்டும் என்பதையே இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

இவ்வாய்வானது விளக்க ஆய்வாக காணப்படுகின்றது. இங்கு தரரீதியான ஆய்வுமுறைமையும் எண் ரீதியான ஆய்வுமுறைமையும் பிரயோகப் படுத்தப்படுகின்றது இவ் ஆய்விற்கான தரவுகளை முதல் நிலைத்தரவான பங்கு பற்றி அவதானித்தல், (participated observation) நேர்காணல்இ (கட்டமைக்கப்படாத) வினாக் கொத்துக்கள் (திறந்த வினாக்கொத்து) மூலமும. இரண்டாம் நிலைத்தரவுகளான புத்தகங்கள், புள்ளிவிபரக கையேடுகள், சஞ்சிகைகள், பிரதேச செயலக அறிக்கைகள், இணையங்கள் போன்றவைகள் மூலமும் பெறப்பட்டன. கல்விச் செயற்ப்பாட்டில் மாணவர்களது, ஆசிரியர்களது, பெற்றோர்களது நடத்தையானது சமூக நடத்தையாக உருப்பெறல் வேண்டும். சமூக நடத்தையானது உடல் சார்ந்த தூண்டல்களினால் மட்டுமன்றி சமூக விதிகள், நியதிகள், நெறிமுறைகள் போன்றவற்றினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆகவே கல்வி நிறுவனங்கள் அர்பணிப்போடும் சமூகமயமாக்கலையும், இடைவினையையும் மேற்கொள்ள வேண்டும்.

**திறவுச் சொற்கள் :** சமூகமயமாதல், இடையூடாட்டம், உடலியல், அறிவுசார் திறன்கள்

*சமூகவியல், மானிடவியல், கிழக்குப்பல்கலைக்கழகம்.*